**செய்தி வெளியீடு எண்: 114/2020 நாள்: 09.03.2020**

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் உள்ள மக்கள் நல்லுறவு மையம் கூட்ட அரங்கில் நடைபெற்ற மக்கள் குறை கேட்பு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது!**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் உள்ள மக்கள் நல்லுறவு மையம் கூட்ட அரங்கில் வாராந்திர மக்கள் குறை கேட்பு நாள் கூட்டம் இன்று (09.03.2020) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு கோரிக்கை மனுக்களை பொதுமக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, ஓய்வூதியத்தொகை. வீட்டுமனைப்பட்டா, பசுமை விடுகள், திருமண உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, இந்திராகாந்தி தேசிய விதவை உதவித்தொகை ஆகிய பல கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் வரப்பெற்றன. அவை அனைத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரைத்து மேல் நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மனுக்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில் வருவாய்த் துறையின் சார்பில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும், 6 பயனாளிகளுக்கு விதவை உதவித் தொகை பெறுவதற்கான ஆணைகளையும், காஞ்சிபுரத்தில் மின்சாரம் தாக்கி இறந்தவரின் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50,000/-த்திற்கான காசோலையையும், காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், தோணான்குளம் கிராமத்தினைச் சார்ந்த 24 நபர்களுக்கு கிராம நத்தம் வகைப்பாட்டில் ரூ.18,70,000/- மதிப்பில் இலவச வீட்டுமனை பட்டாக்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மேலும் 2017-2018 ஆம் ஆண்டிற்கான கொடி நாள் நிதி வசூலில் காஞ்சிபுரம் மாவட்டம் மாநிலத்தில் முதலிடம் பிடித்தமைக்காக மேதகு ஆளுநர் அவர்களால் கேடயமும் பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது. இவ்விருதுக்கு சிறப்பாக செயல்பட்ட 59 அரசு அலுவலர்களுக்கு மேதகு ஆளுநர் மற்றும் தலைமை செயலர் ஆகியோரால் கையொப்பமிட்ட பாராட்டு சான்றிதழ் மற்றும் பதக்கங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் அலுவலர்களுக்கு வழங்கினார்.

இக்கூட்டத்தில் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி.மாலதி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.தனலட்சுமி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.ரவிச்சந்திரன், காஞ்சிபுரம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலக உதவி இயக்குநர் மேஜர்.சி.ரூபா சுப்புலட்சுமி (ஓய்வு) மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், காஞ்சிபுரம்.**